சார்பு நீதிமன்றம், விருதுநகர்

Date: 24.07.2025

ம.சா.1 – சின்னதம்பி
த/பெ – முத்தையா

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

1) விபத்து எந்த தேதியில் நடைபெற்றது என்று ஞாபகமில்லை, சுமார் 5 வருடங்கள் இருக்கும். என் மீது டிப்பர் லாரி மோதியது. அதன் பதிவெண் எனக்கு தெரியாது. விபத்து ஏற்படுத்திய டிப்பர் லாரி 1ம் எதிர்மனுதாரர் மாணிக்கம் என்பவருக்கு சொந்தமானது என்றால் சரிதான். விபத்து சமயம் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN63V4903 பதிவெண் கொண்ட டிப்பர் லாரி 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு கழகத்தில் காப்பீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான், டிப்பர் லாரிக்கு விபத்து சமயத்தில் காப்பீடு செய்யப்படவில்லை. பாலிசி ஆவணம் போலியாக கொடுக்கப்பட்டதாகும்.

2) ம.சா.ஆ.9 காப்பீடு ஆவணம் 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தால் வழங்கப்படவில்லை என்றும், மேற்படி ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட மோசடியான ஆவணம் என்றால் அது பற்றி தெரியவில்லை. விபத்து சமயம் 1ம் எதிர்மனுதாரர் டிப்பர் லாரி 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்படவில்லை என்பதாலும், காப்பீடு ஊர்ஜிதத்தில் இல்லை என்பதாலும் 2ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.9 காப்பீடு ஆவணம் போலியான ஆவணம் என்பதால் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கும், ம.சா.ஆ.9 காப்பீடு ஆவணத்திற்கும் எந்த சம்மந்தமும்

இல்லை என்றால் சரியல்ல.

3) எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. விபத்து ஏற்படுத்திய டிப்பர் லாரிக்கு விபத்து சமயத்தில் செல்லத்தக்க தகுதி சான்று இல்லை என்றும், மேற்படி லாரியை ஓட்டிய நபருக்கு செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இல்லை என ம.சா.ஆ.6 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கும், 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்திற்கும் எந்த வித காப்பீடு ஒப்பந்தமும் ஊர்ஜிதத்தில் இல்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரதர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.